***பாலு சரவண சர்மா***
புரோகிதர் - ஜோதிடர் - பஞ்சாங்க கணிதர்
எண் 9, 4வது தெருவு, கல்யாண நகர், மேற்கு தாம்பரம், சென்னை 45
கைபேசி +91 98403 69677
மின்னஞ்சல் prohithar@gmail.com இணையம் www.prohithar.com



உ

# சனிபெயர்ச்சி வழிபாடு உகந்த காலம்

(திருநள்ளார் திருக்கோவிலில் வழிபட உகந்த நாட்கள் குறித்த விளக்கம். )

**வாக்கியப்படி திருநள்ளார் கோவில் சனிப்பெயர்ச்சி 6.3.2026 வெள்ளிக்கிழமை காலை 8:24 மணி**

*சனிபகவானை வணங்கும் முன்னர் முதலில் கோவிலில் உள்ள விநாயகர், மூலவர், பரிவார மூர்த்தி, சூரிய பகவானை வழிபட்ட பின்னர்தான் சனீஸ்வரரை வழிபடவேண்டும் என்பது ஆகம விதி.*

சனிப்பெயர்ச்சி வழிபாட்டில் பிறந்த நட்சத்திரம், திதி, கிழமை, யோகம், கரணம், லக்னம் ஆகிய காலங்களில் அர்ச்சனை செய்து வழிபடுவதுதான் முதல் நிலை வழிபாடு அது இயலாத அல்லது தெரியாத நிலையில் கீழ்கண்ட காலங்களில் சனீஸ்வரனை வழிபடுதல் சிறப்பானதாகும்.

## ✱ நட்சத்திரம் அடிப்படையில்

குடும்ப அங்கத்தினர் ஒருவரின் ஜென்ம நட்சத்திரத்திம் திருநள்ளார் சூரிய உதயத்தியத்தில் இருந்து 6 நாழிகை( 2மணி 24நிமிடம்) உள்ள தினத்தில் சனிபகவானை வழிபடல் நன்று.

இரண்டுநாட்களும் 6 நாழிகை (2 மணி 24 நிமிடம்) சூரிய உதயத்தில் இருந்து நட்சத்திரம் இருப்பின் இரண்டாம் நாள் நன்று. இரண்டுநாளும் சூரிய உதயத்தில் நட்சத்திரம் இல்லை எனில் என்று மதியம் உள்ளதோ அன்று வழிபடவும்

சனிபகவான் சஞ்சரிக்கும் மீனராசி நட்சத்திரங்களான **பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி** நட்சத்திரம் உள்ள தினங்கள் மிகவும் விசேஷமான தினங்கள். குறிப்பாக சனீஸ்வரர் அதிபதியாக உள்ள **ரேவதி நட்சத்திரம்** உள்ள தினத்தில் விழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்த தினமாகும்

ஆயுள்காரகனான யமன் அதிதேவதையாக இருக்கும் சதயம் நட்சத்திரமும் நன்று

## ✱ கிழமை அடிப்படையில்

சனிபகவானுக்கு உகந்த நாள் **சனிக்கிழமை** அன்று அல்லது உங்களின் பிறந்த கிழமை அன்றுவழிபடுவது மகிவும் விசேஷமாகும். குடும்பத்துடன் செல்லும் பொழுது குடும்ப அங்கத்தினர் ஒருவரின் ஜென்ம வாரம் வழிபடலாம்.

## ✱ திதி அடிப்படையில்

சனிபகவானின் ஜென்ம திதி சிராவன பகுள நவமி திதி, **தேய்பிறை நவமி திதி** அல்லது வளர்பிறை நவமி திதியில் வழிபடலாம், தேய்பிறை ஏகாதசி திதியின் அதிதேவதை சனீஸ்வரன் எனவே **தேய்பிறை ஏகாதசி திதி**யில் சனீஸ்வரனை வழிபடலாம்.

**சனி ஜெயந்தி: 5.9.2026 சனிக்கிழமை, 26.8.2027 வியாழன் கிழமை, சனிஸ்வரன் பிறந்த நாளான சிராவன பகுள நவமி திதி அன்று சனீஸ்வரனை பூஜிப்பது மிகமிக விசேஷமாகும்.**

## ✱ யோகம் அடிப்படையில்

விஷ்கம்பம் யோகம், ஆயுஷ்மான் யோகம் உதயத்தில் உள்ள தினத்தில் சனீஸ்வரனை வழிபடலாம்.

### ✱ கரணம் அடிப்படையில்

திதியில் பாதி அளவு 6° பாகை கரணம் ஆகும் 11 கரணங்களில் பத்திரை கரணம் உள்ள காலத்தில் சனிபகவானை வழிபடல் நன்று

**வளர்பிறையில் பத்திரை கரணம்**

சதுர்த்தி பின்பாகம், அஷ்டமி முன்பாகம், ஏகாதசி பின்பாகம், பவுர்ணமி முன்பாகம்

**தேய்பிறையில் பத்திரை கரணம்**

திருதியை பின்பாகம், சப்தமி முன்பாகம், தசமி பின்பாகம், சதுர்தசி முன்பாகம்

### ✱ ஜாதக அடிப்படையில் சனி வழிபாடு

ஜாதகத்தில் சனி தசையில் பிறந்தவர்கள், நடப்பு சனி தசை, சனி புத்தி, சனி அந்தரம் காலம் நடக்கும் ஜாதகர்கள் சனீஸ்வர பகவானை வணங்குதல் நன்று

### ✱ மாந்தி / குளிகன் உதயம் அடிப்படையில்

*(குறிப்பு ராகுகாலம், எமகண்டம், குளிகை காலம் போன்று அல்ல இது)*

சனீஸ்வரனின் உபக்கிரகமான மாந்தி உதயகாலம் முதல் 6 நாழிகை (2மணி 24 நிமடம்) வரை சனீஸ்வர வழிபாடு மிகவும் உத்தமமானதாகும். மாந்தி பகல் மற்றும் இரவு காலங்களில் உதயமாகும். சில திருக்கணித பஞ்சாங்கங்கத்தில் மாந்தி உதயம் தரப்பட்டிருக்கும்.

ஜாதகத்தில் குளிகன்/மாந்தி நின்ற நட்சத்திரத்திரம் சூரிய உதயத்தில் உள்ள நாளும் சனிபகவான் வழிபாடு செய்ய நன்று

---

**மாந்தி கணிதம்**

(அனைத்தும் 24 மணி-நிமிடம் அடிப்படையிலானது. இதை பாகை நிமிடம் *(DMS)* முறையில் கால்குலேட்டரில் கணிக்கவும்.

***தேவையான தகவல்*** *1. வழிபடும் கிழமை,*
*2. வழிபடும் நாளின் திருநள்ளார் சூரிய உதயம், அஸ்தமனம் நேரம் (24மணி முறை)*

**மாந்தி பகல் துருவம் கணிதம்**

சூரிய உதயம் முதலாக துருவம்: - ஞாயிறு 10:24, திங்கள் 8:42, செவ்வாய் 7:12, புதன் 5:36, வியாழன் 4:00, வெள்ளி 2:24, சனி 0:48

பகல் மாந்தி உதயம் = (((சூ.அஸ் - சூ உத) *மாந்தி பகல் உதய துருவம்) / 12)+சூ உதயம்

**மாந்தி இரவு துருவம் கணிதம்**

சூரிய அஸ்தமனம் முதலாக துருவம்: - ஞாயிறு 04:00, திங்கள்2:24, செவ்வாய் 0:48, புதன் 10:24, வியாழன் 8:42, வெள்ளி 7:12, சனி 5:36

இரவு மாந்தி உதயம் = (((24° - (சூ.அஸ் - சூ உத)) *மாந்தி இரவு உதயம் துருவம்) / 12)+சூ அஸ்தமனம்

24 மணிக்கு மேல் போனால் 24ஐ கழித்துக்கொள்ளவும் (நள்ளிரவுக்கு பின்னர் மணி)

---

## ❖ அடுத்து வரும் சனிப்பெயர்ச்சி 2028 ❖

✱ **வாக்கியப்படி** கீலக வருடம் சித்திரை மாதம் 9ஆம் நாள் (அங்கிலம் **22.4.2028**) சனிக்கிழமை அதிகாலை 3 மணி அளவில் சனி மீனத்தில் இருந்து மேஷத்திற்கு பெயர்ச்சி அடைகிறார்.*(நேரம் சூரிய உதயாதி அடிப்படையில் மணி-நிமிடத்தில் மாறுதல் இருக்கும்)*

✱ **திருக்கணிதப்படி** பிலவங்க ஸூ மாசி 11ஆம் நாள் (**23.2.2028**) புதன்கிழமை இரவு 8:03 மணி அளவில் சனி பகவான் மேஷராசி, அஸ்வினி நட்சத்திரம் முதல் பாதத்தில் பிரவேசிக்கிறார்

---

சனிவழிபாடு செய்யும் அதே தினத்தில் தங்களின் குலதெய்வம் கோவிலுக்கு நல்லெண்ணெய் தானம் செய்யவும்

*சுபம்*

www.prohithar.com

ஆக்கம் 18.11.2025 செவ்வாய்

**நிஜமான தானம், தர்மம், இறைவழிபாடு, நெறியான வாழ்வு மட்டுமே நம்மை காக்கும்**

உ

விஸ்வாவசு ஆண்டு சனி மீன பெயர்ச்சி கணிதம்
வரருசி வாக்கிய கரண முறை
6-3-2026 வெள்ளிக்கிழமை மாசி 22
4 நாழிகை 50 விநாழிகை (8:30AM) IST

---

விஸ்வாவசு ஆண்டு சித்திரை 1 கலிசுத்த தினம்
[5126 x 365-15-31-25] - 2-8-51-25
= 1872313 - 50 - 56 - 15
மாசி 22 வரை 327 நாள் கூட்ட வருவது
கலிசுத்த தினம் 1872640 (மாசி 22

---

சனி பெயர்ச்சி கணிதம்
1872640 - 00 - 00
-1589474 - 28 - 00 (-326) Ⓐ
-182994 - 23 - 00 (-013) Ⓐ
-86204 - 00 - 00 (+172) Ⓐ
-10964 - 32 - 00 (+401) Ⓐ
= 3002 - 37 - 00
(3002/378) = 7.9 7வது முடிந்து 8வது பரிவர்த்தி
மீதம் நின்றது
356 - 37 - 00

21551-0-0 x 4
=86204-0-0
043 x 4 = +172
3002/378
7.9
378 x 7 = 2646
3002 - 2646
= 356

துருவம் Ⓐ கூட்டல் = 3° 54' ←
வர்த்தனம் 0° 3' 54" Ⓑ ←

8வது பரிவர்த்தி

348வது நாள் 324 56 (+1) Ⓒ
378 வது நாள் 328 44 (+1). Ⓒ

348வது நாள்
324 56 (+1)
3 54
328 50 00
3 54
★ 328 - 53 - 54

B x C
+01 x 0° 3' 54"
= 0 3 54 Ⓓ

378 வது நாள்
328 44 (+1)
3 54 (A)
3 54 (D)
332 41 54

கதி 30 நாள்
332 41 54
-328 53 54
7 3° 58' 00"

ஒருநாள் கதி 0° 7' 36"

பெயர்ச்சி 356வது நாள் – 348 நாள்
= 8 நாள் 37 நாழிகை

$\left(\frac{3^\circ 48'}{30}\right) \times$ 8 நா 37 நாழி = 1° 59' 29.2"

348வது நாளில் ஸ்புடம் 332 41 54
356வது நாள் கூட்ட 1 59 29.2
356வது நாள் உதய பாகை 329 59 23.2

மீன பிரவேசம்
330°(–)329°-59' 23.2" = 0° 0' 36.8"

$\left(\frac{60}{0^\circ 7' 36''}\right) \times 0^\circ 0' 36.8''$ = 4 நாழி 50 விநா 31 தற்பரை

ஆரம்பம் 6-3-2026 வெள்ளி
காலை சூரிய உதய நாழிகை 4:50
சுமார் 8:30AM மணி அளவில் சனி மீன ராசி பிரவேசம்

**திருநள்ளாறு உள்ளூர் நேரப்படி காலை 8:24 மணி**

---

2028 – மீண்டும் சித்திரை 8ஆம் நாள்
(21/4/2028) வெள்ளி
கலி 1873417 அன்று சனி ஸ்புடம்
359° 53' 17" [கதி 0° 8' 8"]
மேஷ பிரவேசம் 49 நாழி 32 விநா
இரவு 1 மணி 49 நிமிடம் அளவில் மேஷ சனி பிரவேசம்.